**சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண்.II**
**மோட்டார் வாகன விபத்து வழக்கு கோருரிமை தீர்ப்பாயம், கடலூர்.**

# MCOP.No.320 of 2022

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | PW1 |
| **Name of the Witness** | **:** | குணராஜ் |
| **Father's Name** | **:** | சிவராமன் |
| **Age** | **:** | 42 |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | வீராணம், விழுப்புரம் |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 09th day of April, 2026.

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

நான் அசல் மனுவில் மனுதாரர் ஆவேன். அந்த வகையில் இந்த வழக்கினை பற்றி எனக்கு நேரடியாக தெரியும். இவ்வழக்கில் எனது சாட்சியத்தை கூடுதல் சத்தியப்பிரமாண வாக்குமூலமாக கணிப்பொறி அச்சு செய்து கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதன் விவரங்களை என் வழக்கறிஞர் விளக்கி கூறினார். அதன் விவரத்தை தெரிந்து கொண்ட பிறகு நான் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கைரேகை செய்தேன். அதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக கருதிட வேண்டுகின்றேன். எனது சாட்சியத்தை உறுதியூட்ட கீழ்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்கின்றேன்.

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் விபத்து பதிவேட்டு நகல் - கடலூர் அரசு தலைமை மருத்துவமனை | **Ex.P22** |
| 2. | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் | **Ex.P23** |
| 3. | குற்ற இறுதி அறிக்கை நகல் | **Ex.P24** |
| 4. | மனுதாரர் ஓட்டிசென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் | **Ex.P25** |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

மசாஆ.23 ஆவணத்தில் முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் காப்பீடு விதிமீறல்களில் ஈடுபட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் ஏதேனும் இழப்பீடு பெறவேண்டுமெனில் அதனை முதல் எதிர்மனுதாரரிடம் மட்டுமே கோர முடியும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை -** இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Spl. District Judge, No.II*
*Spl. District Court No. II*
*to deal with MCOP Cases,*
*Cuddalore.*